[28th January 1969

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, பி.ஏ. அல்லது பி.எஸ்ஸி. தமிழ் எடுத்து படித்து வருகிற ஆசிரியர்களுக்கு போதுமான அளவிற்கு தமிழ் அறிவு இருக்கும் என்று கருத வேண்டியிருக்கிறது. தமிழ் அல்லாத ஆசிரியர்கள் எஸ்.எஸ்.எல்.சி. அளவிற்கு தமிழில் பயிற்சி பெற்று தேர்வு எழுதவேண்டுமென்று இருக்கிறது. அவர்கள் தமிழ ஆசிரியர்களாக பொறுப்பேற்று பணியாற்ற வேண்டுமானால், அதற்கான தனித் தகுதி பெறவேண்டும்.

Thiru A. R. DAMODARAN : In view of the fact that in many high schools (former Board High Schools) there is an English medium class even for the S.S.L.C. students, will it not be possible for such Graduate Assistants to be absorbed for teaching these English medium classes instead of asking them to qualify for tests in Tamil ?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, தமிழைப் பயிற்சி மொழியாகக் கொண்ட பள்ளிகளில்தான் இந்த நிபந்தனை தேவைப்படுகிறது. ஆங்கிலத்தை பயிற்சி மொழியாகக் கொண்டிருக்கும் இடங்களில் தேர்வு தமிழில் பெற்றிருக்கவேண்டுமென்று எதிர் பார்ப்பதில்லை.

Express Buses

*10 *Q*.—Thiru G. KRISHNAMOORTHY (on behalf of Thiru M. RAJAH IYER) : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) the number of State Transport express buses plying daily between Ramanathapuram and Krishnagiri ; and

(*b*) whether there is any proposal to increase them ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : (அ) இரண்டு.

(இ) இல்லை.

*11 *Q*.—Thiru N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether a State Transport Express Bus plying between Theni and Usilampatti of Madurai district in January 1968 collided with a car or a Lorry which was running at 60 miles speed ;

(*b*) whether 20 persons in the Express Bus sustained injuries due to this accident ; and

(*c*) the number of such accidents in which express buses were involved during the last six months ?

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு பொதுப்பணி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1968 ஜனவரியில் மதுரை மாவட்ட தேனியிலிருந்து உசிலம்பட்டி நோக்கிச் சென்ற தமிழக அரசு விரைவு வண்டி 60 மைல் வேகத்தில் எதிரில் வந்த காருடன் அல்லது லாரியுடன் மோதியதா ?

(இ) இதனால் துரித வண்டியில் இருந்த 20 பேருக்குக் காயமா?

(உ) இம்மாதிரி துரித வண்டிகளில் சென்ற 6 மாதத்தில் எத்தனை விபத்துக்கள் நடந்தன?

28th January 1969]

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : (அ) இல்லை.

(இ) இவ்வினா எழாது.

(உ) 105.

திரு. என். ஆர். தியாகராஜன் : தலைவரவர்களே, சர்க்கார் எக்ஸ்பிரஸ் பஸ்கள் போகும் வேகம் மிகவும் அதிகமாக இருக்கிறது. அதுமட்டுமல்ல அதை ஓட்டுபவர்கள் பொறுப்பின்றி ஓட்டிக் கொண்டு போகிறார்கள். இதை என்னுடைய சொந்த அனுபவத்திலிருந்து கூறுகிறேன். சர்க்கார் பஸ்ஸில் நெருப்பு பிடித்துக்கொண்ட போதும், டிரைவர்களும், கண்டக்டர்களும் அந்த நெருப்பில் தண்ணீரை எடுத்து ஊற்றாமல் இருக்கிறார்கள். அந்த வேலையை நாங்கள் ஏன் செய்ய வேண்டுமென்கிறார்கள். பிறகு நாங்கள் தண்ணீரை ஊற்றி அணைத்தோம். ஆகவே இத்தகைய நிலையில் மிகவும் படுமோசமாகப் போய்க் கொண்டிருக்கிறது. சர்க்கார் இது சம்பந்தமாக தக்க நடவடிக்கை எடுக்க முயற்சி செய்யுமா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சென்ற அந்த பேருந்து வண்டி ஊழியர்கள் அப்படி நடந்து கொண்டிருந்தால் உடனடியாகவே அந்த பேருந்து வண்டியின் எண்ணையும், அப்படி தவறாக நடந்து கொண்டவர்களையும் பற்றி அரசாங்கத்திற்கு எழுதியிருப்பார்களானால் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்திருக்கும். அதுபோல் ஒவ்வொருவரும் அப்படிப்பட்ட புகார்களை அரசாங்கத்திற்கு உடனடியாகத் தெரிவிப்பார்களானால், நிச்சயமாக அரசாங்கம் நடவடிக்கை மேற்கொள்ளும்.

திரு. என். ஆர். தியாகராஜன் : தலைவர் அவர்களே, அரசாங்க பஸ்களில் புகார் புத்தகங்கள் வைக்கப்பட வேண்டுமென்று விதியிருக்கிறது. ஆனால் இது வைக்கப்படவில்லை. அப்படி வைக்கப்பட்டிருந்தாலும், டிரைவர்கள் அதைக் கொடுக்க மறுக்கிறார்கள். நாங்கள் பின்னர் நாலைந்து பேர் பலாத்காரமாகச் சேர்ந்து அந்த புத்தகத்தைப் பறித்தோம். பறித்து அதில் 12 பக்கம் எழுதிவைத்திருக்கிறோம். ஆனால் அந்தக் குறைகளை டைரக்டரோ, அமைச்சரோ பார்த்திருக்கவேண்டும். இனியாவது அப்படிப் பார்த்துக் குறைகளை நிவர்த்தி செய்ய முன்வருவார்களா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : புகார் புத்தகத்தை அவர்களிடமே காட்டவில்லை என்று கூறுகிற நேரத்தில் அப்படிப்பட்ட புகார்கள் எழுதப்பட்டதால் அதை எங்களிடம் காட்டாமல் மறைத்திருக்கக்கூடும். ஆகவே அந்தப் புத்தகத்தில் எழுதியதோடு மட்டுமில்லாமல், அந்தப் புகார்களை எழுதியிருக்கிற மாண்புமிகு உறுப்பினர்கள் அதை எங்களுக்கும் தெரிவித்தால், அதை நாங்கள் ஒப்பிட்டுப்பார்த்து நடவடிக்கை மேற்கொள்ள ஏதுவாக இருக்கும். இந்த உதவியை அரசாங்கத்தோடு சேர்ந்து ஒத்துழைப்பு தர உறுப்பினர்கள் முன்வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. என். ஆர். தியாகராஜன் : தலைவர் அவர்களே, இத்தகைய புகார் ஒன்று டைரக்டர் ஆப் டிரான்ஸ்போர்டிற்கு எழுதி பதிலே வரவில்லை. ஏன் பதில் எழுதவில்லை என்று மீண்டும் அவருக்கு எழுதி அதற்கும் பதில் வரவில்லை.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இதற்குப் பிறகாவது அத்தகைய புகார்களை சம்மந்தப்பட்ட அமைச்சர் அவர்களுக்கு மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்த விவரமும் தெரிவிக்கப்படுமானால், அந்த அதிகாரிகள் மீதும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

THIRU D. SANTOSHAM : May I go the whole hog with the Leader of the Opposition ? There is no doubt that the Express State buses are driving at dangerously high speed on the Highways. In this situation, will the Government consider installing in

these buses some speed restriction devices as used to be installed in T.V.S. buses so that even if the drivers want, they may not be able to drive beyond a certain speed of about 40 or 45 miles per hour ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அப்படி மீறிச் செல்பவர்களை உடனடியாகத் தடுக்கவும், அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கவும் இப்போது அரசாங்கத்தால் புதிய திட்டம் வகுக்கப்பட்டு, இலாகாவைச் சேர்ந்தவர்கள் போலீஸ் அதிகாரிகளின் உதவியுடன் பறக்கும் படை அமைத்து அவர்களை எல்லாம் கண்காணிக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

திரு. எம். ராகவானந்தம் : தலைவரவர்களே, இந்த ஆட்சி வந்த பின்னர் போக்குவரத்துத் தொழிலாளர்களுக்குத் தண்டனை கடுமையாகக் கொடுக்கப்படுகிறது என்று சொல்லி அதைத் தளர்த்த வேண்டுமென்று முறையீடு வந்திருப்பது அமைச்சருக்குத் தெரியுமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : கடுமையாக தண்டிக்கப்படுகிறார்கள் என்ற முறையீடு வந்திருக்கலாம். அதைப்போலவே அவர்கள் கடுமையாக மற்றவர்களை நடத்துகிறார்கள் என்கிற முறையீடும் வந்திருக்கிறது.

Thiru G. SWAMINATHAN : Are there any statistics regarding the number of accidents in Government Transport buses during the year 1967 or 1968 ? May I know whether the accidents have increased or decreased in number ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அதற்குத் தனிக் கேள்வி போட்டால் அதுபற்றி விவரங்கள் அளிக்கப்படும்.

Government Buses

* 12 *Q.*—**Thiru N. R. THIAGARAJAN :** Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether three buses belonging to the State Transport sank in water in between Kalanikudi and Naral in Ramanathapuram district due to heavy rains in October 1967 ;

(*b*) the number of passengers affected thereby ;

(*c*) the number of buses damaged ; and

(*d*) when these buses were rescued ?

அரசு பேருந்துகள்

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு பொதுப்பணி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1967 அக்டோபரில் ஏற்பட்ட மழை காரணமாக இராமநாதபுரம் மாவட்ட கழனிக்குடி, நாரல் என்ற ஊர்களுக்கு மத்தியில் தமிழக அரசின் மூன்று பேருந்துகள் நீரில் மூழ்கியதா?

(இ) இதனால் எத்தனை பிரயாணிகள் பாதிக்கப்பட்டனர்?

(உ) எத்தனை பேருந்துகள் சேதமடைந்தன?

(எ) எப்பொழுது இந்தப் பேருந்துகள் மீட்கப்பட்டன?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : (அ) இல்லை.

(இ), (உ) and (எ) இவ்வினா எழவில்லை.